# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

## 1996 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க இலங்கை தொலைத்தொடர்பு (திருத்தம்) சட்டம்

(1996 ஆம் ஆண்டு ஒக்தோபர் 23 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

1996 ஒக்தோபர் மாதம் 25 ஆம் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் IIஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 5 அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 44.00

## 1996 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க இலங்கை தொலைத்தொடர்பு (திருத்தம்) சட்டம்

(1996, ஆம் ஆண்டு ஒக்தோபர் 23 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப் பட்டது)

ச. வ.—ஓ 14/96

### 1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, இலங்கை தொலைத் தொடர்புச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளு மன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் திகதியும்.

1. இச்சட்டம், 1996 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, இலங்கை தொலைத் தொடர்பு (திருத்தம்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், அமைச்சர் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய திகதியன்று (இதனகத்தப் பின்னர் "நியமிக்கப்பட்ட திக்தி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கச் சட்டத்தின் விரிவுப் பெயரைத் திருத்துதல்.

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, இலங்கை தொலைத் தொடர்புச் சட்டத்தின் விரிவுப் பெயர் "தொலைத் தொடர்புப் பணிப்பாளர் தலைமையதிபதி யொருவரின் நியமனத்துக்கு" என்னும் சொற்களுக்கு பதிலாக, "இலங்கைத் தொலைத் தொடர்பு ஒழுங்கு படுத்துதல் ஆணைக்குழுவைத் தாபிப்பதற்கு" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் பாகம் 1 இன் தலைப்பை மாற்றீடு செய்தல்.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவிற்கு நேர்முந்திய பாகம் 1 இல் காணப்படும் தலைப்பு இத்தால் நீக்கஞ்செய்யப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் புதிய தலைப்பு இடப்படுகின்றது :

"இலங்கைத் தொலைத் தொடர்பு ஒழுங்குப்படுத்துதல் ஆணைக்குழுவைத் தாபித்தலும் அமைத்துருவாக்குதலும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ்செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :—

"இலங்கைத் தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்துதல் ஆணைக் குழுவைத் தாபித்தல்.

2. (1) இலங்கைத் தொலைத் தொடர்பு ஒழுங்குப்படுத்துதல் ஆணைக்குழு என அழைக் கப்படவேண்டிய ஆணைக்குழுவொன்று தாபிக்கப்படுதல் வேண்டும். (இது இதன கத்துப்பின்னர் "ஆணைக்குழு" என அழைக்

கப்படும்). ஆணைக்குழு, இச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் அப்போதைக்கு ஆணைக்குழுவின் உறுப்பினர்களாக இருக்கின்ற ஆட்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) ஆணைக்குழு (1) ஆம் உட்பிரிவால் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட பெயரால் இடையறா வழியுரிமையும் பொது இலச்சினையொன்றையுமுடைய கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டும் என்பதுடன் அப்பெயர்கொண்டு வழக்குத்தொடரலாம் என்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடரவும் படலாம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ்செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பிரிவு இடப்படுகின்றது :—

"ஆணைக் குழுவை அமைத்துருவாக்குதல்.

3. (1) ஆணைக்குழு பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் ; இவர் ஆணைக்குழுவின் தவிசாளராக இருத்தல் வேண்டும் ;

(ஆ) அப்போதைக்குப் பணிப்பாளர் தலைமையதிபதியாகப் பதவி வகிக்கும் ஆள் ; அத்துடன்

(இ) அங்கீகரிக்கப்பட்ட எவையேனும் தகைமைகளைக் கொண்டிருப்பவர்களும் முறையே சட்டம், நிதி, முகாமைத்துவம் ஆகிய துறைகளில் சிறந்து விளங்கியிருப்பவர்களுமான ஆட்களிடையேயிருந்து அமைச்சரால் நியமிக்கப்படும் மூன்று ஆட்கள். (இவர்கள் இதனகத்துப்பின்னர் "நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்" எனக் குறிப்பீடு செய்யப்படுவர்).

(2) இச்சட்டத்திற்கான அட்டவணையின் ஏற்பாடுகள் ஆணைக்குழுவின் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் தொடர்பில் ஏற்புடையனவாதல் வேண்டும்.".



முதன்மைச் சட்டவாக்கத்தில் 3அ, 3ஆ, 3இ, 3ஈ, என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.

6. பின்வரும் புதிய பிரிவுகள் முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவை உடனடுத்து இத்தால் உட்புகுத்தப்படுகின்றன என்பதுடன் அவை முதன்மைச் சட்டவாக்கத்தில் 3அ, 3ஆ, 3இ, 3ஈ என்னும் பிரிவுகள் என்றாற்போன்று பயனுறுதலும் வேண்டும்.

"ஆணைக்குழுவின் கூட்ட நடப்பெண்ணும் கூட்டங்களும்

3அ. (1) ஆணைக்குழுவின் கூட்டமொன்றிற்கான கூட்டநடப்பெண் மூன்று உறுப்பினர்களாதல் வேண்டும்; ஆணைக்குழுவின் தவிசாளர் இவர்களுள் ஒருவராக இருத்தல் வேண்டும்.

(2) தவிசாளர் அல்லது அவர் இல்லாதபோது பணிப்பாளர் தலைமையதிபதி ஆணைக்குழுவின் கூட்டம் ஒவ்வொன்றிற்கும் தலைமை தாங்குதல் வேண்டும்.

(3) ஆணைக்குழுவின் ஏதேனும் கூட்டத்தில் முடிவெடுக்கப்படுவதற்கான எல்லாக் கேள்விகளும் அத்தகைய கூட்டத்தில் சமுகமாயிருக்கும் உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்குகளால் முடிவுசெய்யப்படுதல் வேண்டும்.

(4) இப்பிரிவின் மேற்போந்த ஏற்பாடுகளுக்கமைய, ஆணைக்குழுவானது, ஆணைக்குழுவின் கூட்டங்கள் தொடர்பிலும் அத்தகைய கூட்டங்களில் அலுவல்களை நிறைவேற்றுதல் தொடர்பிலும் நடவடிக்கைமுறையை ஒழுங்குபடுத்தலாம்.

ஏதேனும் குறைபாடு இருப்பினும் செல்லுபடியாதல்.

3ஆ. ஆணைக்குழுவின் எவரேனும் அலுவலர்களின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு உளது என்ற காரணத்தினால் மட்டும் அதன் செயல், முடிவு அல்லது நடவடிக்கை எதுவும் செல்லுபடியற்றதாகக் கருதப்படுதலாகாது.

ஆணைக்குழுவின் உறுப்பினர்களின் ஊதியம்.

3இ. ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கு, ஆணைக்குழுவின் நிதியத்திலிருந்து, அமைச்சரால் நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருடனான கலந்தாலோசனையுடன் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய வீதங்களிலும் ஊதியமளிக்கப்படலாம்.

ஆணைக்குழுவின் இலச்சினை.

3ஈ. ஆணைக்குழுவின் இலச்சினையானது —

(அ) ஆணைக்குழுவால் தீர்மானிக்கப்படுதலும் புனையப்படுதலும் வேண்டும், என்பதுடன் ஆணைக்குழுவால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றவும்படலாம் ;

(ஆ) ஆணைக்குழு காலத்துக்குக் காலம் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய ஆளின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும் ; அத்துடன்

(இ) ஆணைக்குழுவின் சம்மதத்துடனும் ஆணைக்குழுவின் இரண்டு உறுப்பினர்களின் முன்னிலையிலும் அன்றி சாதனம் அல்லது ஆவணம் எதிலும் பொறிக்கப்படுதலாகாது. இவர்கள் தாங்கள் சமுகமாயிருந்ததற்கு அடையாளமாக அச்சாதனத்தில் அல்லது ஆவணத்தில் கையொப்பமிடுதல் வேண்டும்.

(2) ஆணைக்குழு, ஆணைக்குழுவின் இலச்சினை பொறிக்கப்பட்டுள்ள சாதனங்களினதும் ஆவணங்களினதும் இடாப்பொன்றினைப் பேணுதல் வேண்டும்.".

“அதிகாரி” யைப் பற்றிய குறிப்பீடு “ஆணைக் குழு” வைப் பற்றிய குறிப்பீடொன்றாகப் பொருள் கொள்ளப்படுதல் வேண்டும்.

7. முதன்மைச் சட்டவாக்கத்திலும் அத்துடன் ஏதேனும் விதி, அறிவித்தல், அறிவிப்பு, சாதனம் அல்லது வேறு ஆவணம் எதிலும் “அதிகாரி” யைப் பற்றிய குறிப்பீடு ஒவ்வொன்றும் “ஆணைக்குழு”வைப் பற்றிய குறிப்பீடொன்றாக, வாசித்துப் பொருள்கொள்ளப்படுதல் வேண்டும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துதல்

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (ஊ) என்னும் பந்தியில் “காலத்துக்குக் காலம் அவருக்கு விடுக்கப்படக்கூடிய” என்னும் சொற்களுக்குப் பதிலாக, “காலத்துக்குக்காலம் அதற்கு விடுக்கப்படக்கூடிய” என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;



(2) அப்பிரிவின் (ஐ) என்னும் பந்தியை நீக்கஞ்செய்துவிட்டு அதற்குப் பதிலாக, பின்வரும் பந்தியை இடுவதன்மூலமும் :—

“(ஐ) சர்வதேசத் தொலைத் தொடர்புச் சங்கத்துடனும் வேறு வெளிநாட்டுத் தொலைத் தொடர்பு இயக்குநர்களுடனும் சர்வதேசத் தொலைத் தொடர்பு ஒழுங்கமைப்புகளுடனும், தொலைத் தொடர்பு முறைமையொன்றைத் தாபிப்பதற்கான தர நிர்ணயங்கள் மற்றும் நடவடிக்கை முறைகள் தொடர்பாக உடன்படிக்கைகளை ஏற்படுத்துவதற்கு. இணக்கப்பேச்சுவார்த்தைகள் நடத்துவதில் துணைபுரியுமாறு வேண்டுகோள் விடுக்கப்படுமிடத்து ஏதேனும் அமைச்சுக்குத் துணைபுரிதல் ;".

(3) அப்பிரிவின் (ஒ) என்னும் பந்தியில் “அமைச்சரினதும் நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினதும் ஆலோசனையுடனும் விதிகள் மூலம் குறித்துரைத்தல்;” என்னும் சொற்களுக்குப் பதிலாக, “அமைச்சருடனான ஆலோசனையுடன் தீர்மானித்தல்;” என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;

(4) அப்பிரிவின் பந்தி (ந) என்பதில் “அவருக்குச் சமர்ப்பிக்குமாறு” என்னும் சொற்களுக்குப் பதிலாக, “அதற்குச் சமர்ப்பிக்குமாறு” என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;

(5) அப்பிரிவின் பந்தி (ந) என்பதில் “அவருக்கு ஆலோசனையளிக்கும் நோக்கத்துக்காக அவர் அவசியமெனக் கருதக்கூடியவாறான அத்தகைய ஆலோசனைக் குழுக்களைத் தாபித்தல் ;” என்னும் சொற்களுக்குப் பதிலாக, “அதற்கு ஆலோசனையளிக்கும் நோக்கத்திற்காக அவசியமானதெனக் கருதப்படக்கூடியவாறான அத்தகைய ஆலோசனைக் குழுக்களைத் தாபித்தல் ;” என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;

(6) அப்பிரிவின் (ர) என்னும் பந்தியில் "இடைநேர் விளைவர்க்கூடிய அல்லது உசிதமாகக்கூடிய அத்தகைய எல்லா வேறு செயல்களையும் செய்தல்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களையும் கடமைகளையும் பிரயோகிப்பதற்கு அல்லது புரிவதற்கு இடைநேர்விள்ளவாகக்கூடிய அல்லது உசிதமாகக்கூடிய அத்தகைய வேறு எல்லாச் செயல்களையும் செய்தல்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவைத் திருத்துதல்.

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவு, அப்பிரிவின் "இசசட்டத்தின்கீழ் அவரின் தத்துவங்களையும் பணிகளையும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களையும், பணிகளையும்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவைத் திருத்துதல்.

10. முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவு அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில், "அவரது தத்துவங்களையும், பணிகளையும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அதன் தத்துவங்களையும் பணிகளையும்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவைத் திருத்துதல்.

11. முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "அவர் அவ்சியமெனக் கருதக்கூடியவாறான" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அது அவசியமெனக் கருதக்கூடியவாறான" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், "அவசியமானதென அவர் கருதும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அவசியமானதென அது கருதும்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவைத் திருத்துதல்.

12. முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "அவர் அவசியமானதெனக் கருதுமிடத்து" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அது அவ்சியமானதெனக் கருதுமிடத்து" என்னும் சொற்களை இடுவதன்மூலம்.



முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவைத் திருத்துதல்.

13. முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :

(1) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் –

(அ) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியில், "அவர் உத்தேசித்துள்ளாரென" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அது உத்தேசித்துள்ளதென" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;

(ஆ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் "அவரது அபிப்பிராயப்படி" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அதன் அபிப்பிராயப்படி" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியில், "அவர் உத்தேசித்துள்ளாரெனக் கூறுதலும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அது உத்தேசித்துள்ளதெனக் கூறுதலும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(3) அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியில், "தோதானதென அவர் கருதும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "தோதானதென அது கருதும்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவைத் திருத்துதல்.

14. முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கஞ்செய்துவிட்டு, அதற்குப் பதிலாக, பின்வரும் பிரிவை இடுவதன் மூலமும் :—

"(1) ஆணைக்குழு, அதற்குச் செய்யப்பட்ட முறையீடுகள் மீது அல்லது வேறுவகையாக, அதன் தத்துவங்களின் பிரயோகம் அல்லது உத்தேசப் பிரயோகம் தொடர்பி

லான ஏதேனும் கருமம் பொது மக்கள் நலன்கருதி நுண்ணாய்வு செய்யப்படுதல் அல்லது தீர்மானிக்கப்படுதல் அவசியமானதென அது கருதுகின்றவிடத்து, அதன் சொந்தப் பிரேரணைமீது பகிரங்க விசாரணை ஒன்றை நடாத்தலாம்.".

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் முறையே "அதிகாரியை" என்னும் சொல்லுக்கும், "அதிகாரியினால்" என்னும் சொல்லுக்கும் பதிலாக, முறையே "ஆணைக்குழுவின் தவிசாளரை" என்னும் சொற்களையும், "சொல்லப்பட்ட தவிசாளரால்" என்னும் சொற்களையும் இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவைத் திருத்துதல்.

15. முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவு, முறையே "அவரின் கட்டுக்காப்பிலுள்ளதுமான" என்னும் சொற்களுக்கும், "அதிகாரியின் அல்லது குழுவின்" என்னும் சொற்களுக்கும் பதிலாக, "அதன் கட்டுக்காப்பிலுள்ளதுமான" என்னும் சொற்களையும் "ஆணைக்குழுவின் தவிசாளரின் அல்லது குழுவின்" என்னும் சொற்களையும் இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவைத் திருத்துதல்.

16. முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவு, இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் –

(அ) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் "அவரது முன்னத்தைப் பற்றித் தோதானதென அவர் கருதுகின்றவாறான அத்தகைய முறையில் அவர்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அதன் முன்னத்தைப் பற்றித் தோதானதென அது கருதுகின்றவாறான அத்தகைய முறையில் அது" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ; அத்துடன்

(ஆ) அந்த உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (i) ஆம் உட்பந்தியில் "அவர் உத்தேசிக்கின்றதெனக்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஆணைக்குழ உத்தேசிக்கின்றதெனக்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவில், "தன்னைத் திருப்திப்படுத்திக்கொள்ளுதல் வேண்டும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அதனைத் திருப்திப்படுத்திக்கொள்ளுதல் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;

(3) அப்பிரிவின் (7) ஆம் உட்பிரிவில் –

(அ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில், "அளிப்பதில் அவரால் உறப்பட்ட" என்பதிலிருந்து அப்பந்தியின் முடிவு வரையிலான எல்லாச் சொற்களுக்கும் பதிலாக, "அளிப்பதில் அதனால் உறப்பட்ட செலவுகளை மேவுவதற்கான அத்தகைய பணம் அல்லது பணங்களையும் அதிகாரிக்குக் கொடுக்கும்படித் தேவைப்படுத்துகின்ற நிபந்தனைகள்:" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(ஆ) அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியில், "அவரது கடமைகளைப் புரிவதற்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அதன் கடமைகளைப் புரிவதற்கு" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(4) அப்பிரிவின் (9) ஆம் உட்பிரிவில், "திரட்டு நிதியத்திற்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இச்சட்டத்தின் 22அ என்னும் பிரிவால் தாபிக்கப்பட்ட ஆணைக்குழுவின் நிதியத்திற்குச்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவைத் திருத்துதல்.

17. முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் "அக்கறைக்கானதென்று கருதினால்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அக்கறைக் கானதென்று கருதினால்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 18அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

18. முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 18அ என்னும் பிரிவு என்றாற்போன்று பயனுறுதலும் வேண்டும்.

"தொலைத் தொடர்புத் தொகுதி எவரேனும் ஆளினால் தொழில் நோக்கங்களுக்குப் பயன்படுத்தப்படுவதை, அனுமதிப்பதின்று இயக்குநர் தடைசெய்யப்படுகின்றார்,

18அ. (1) உரிமம் எந்தத் தொலைத்தொடர்புத் தொகுதி தொடர்பில் இயக்குநர் ஒருவருக்கு வழங்கப்பட்டதோ அந்தத். தொலைத் தொடர்புத் தொகுதி வேறு எவரேனும் ஆளினால், ஆணைக்குழுவின் அங்கீகாரத்தை முன்னரே பெற்றுக்கொள்ளாமல் கட்டணமொன்றின் அல்லது சன்மானமொன்றின் கொடுப்பனவுமீது. ஒரு தொழில் என்ற வகையில் தகவல்களை அனுப்பும் நோக்கத்திற்கு அல்லது தகவல்களைப் பெறும் நோக்கத்திற்கு, பயன்படுத்தப்படுவதை அத்தகைய இயக்குநர் அனுமதித்தலாகாது.

(2) இயக்குநர் ஒருவரால் அதன்பொருட்டு விண்ணப்பமொன்று செய்யப்படுவதன்மீது, ஆணைக்குழுவானது, இயக்குநருக்கு அனுமதிப் பத்திரமொன்றை வழங்குவதன்மூலம் (1) ஆம் உட்பிரிவின் நோக்கத்திற்கு அங்கீகாரம் அளித்தல் வேண்டும் என்பதுடன் அவ்வங்கீகாரம் அதன்கண் குறித்துரைக்கப்படக்கூடியவாறான நியதி, நிபந்தனைகளுக்கு அமைந்ததாதலும் வேண்டும்.

(3) ஆணைக்குழுவானது (2) ஆம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரத்தை அது எந்த நியதி, நிப்ந்தனைகளுக்கு அமைவானதோ அந்த நியதி, நிபந்தனைகள் எதனதும் மீறுகையின்மீது ஏதேனும் நேரத்தில் இல்லாதொழிக்கலாம்.

(4) ஒராம் உட்பிரிவுக்கு முரணாகச் செயற்படும் இயக்குநர் ஒருவர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் பத்தாயிரம் ரூபாவுக்குக் குறையாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.".



முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவைத் திருத்துதல்.

19. முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில்

(அ) அப்பந்தியின் (ii) ஆம் உட்பந்திக்குப் பதிலாக; பின்வரும் உட்பந்தியை இடுவதன் மூலம் :—

"(ii) இன்னொரு தொலைத்தொடர்புத் தொகுதியுடன் இணைக்கப்படாததும் அத்துடன் அதன்கண் அடங்கியுள்ள எல்லா உபகரணங்களும் ஒன்றில் –

(அ) சொந்தக்காரரது அல்லது வாடகைக்குடியிருப்பாளரது ஏக பாவனைக்கு அடுத்தடுத்துள்ள எல்லைக்குட்பட்ட தனிச்சொத்துவத்தினதான அல்லது வாடகைக் குடியிருப்பினதான வளவுகளில் ; அல்லது

(ஆ) ஒரு வாகனத்தில், கலத்தில், வானூர்தியில் அல்லது மீவானூர்தியில் அல்லது பொறிமுறையாக ஒன்றாகத் தொடுக்கப்பட்ட இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வாகனங்களில், கலங்களில், வானூர்திகளில் அல்லது மீவானூர்திகளில்

அமைந்துள்ளவிடத்தும் ; அல்லது

(ஆ) அப்பந்தியின் (iii) ஆம் உட்பந்தியில் "தனியாளொருவர் அத்தகைய தொகுதியை நடாத்துமிடத்து, அத்துடன் என்னும் சொற்களுக்குப் பதிலாக," "இன்னொரு தொலைத் தொடர்புத் தொகுதியுடன் இணைக்கப்படாததும் தனியாளொருவர் அத்தகைய தொகுதியை நடாத்துமிடத்தும் அத்துடன் –" என்னும் சொற்களை இடுவ்தன்மூலமும் ;

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், (அ) என்னும் பந்தியில் "ஒராம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஒராம் உட்பிரிவின் (இ)

என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ; அத்துடன்

(3) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் (அ) என்னும் பந்தியில், "(1) ஆம் உட்பிரிவின் (அ)(iii) என்னும் பந்தியில் அல்லது (ஈ) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "(1) ஆம் உட்பிரிவின் (அ) (iii) அல்லது (இ) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவைத் திருத்துதல்.

20. முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுவதன் மூலம் :—

"(1) ஆளெவரும், ஆணைக்குழுவால் வழங்கப்பட்ட உரிமமொன்றின் அதிகாரத்தின்கீழ் தவிர, வியாபாரம் என்ற வகையில், ஏதேனும் தொலைத்தொடர்பு உபகரணத்தை உற்பத்திசெய்தல், இறக்குமதி செய்தல், விற்பனை செய்தல், விற்பனைக்கு முன்னுதல், கையாளுதல், கைமாற்றுதல், வாடகைக்கு விடுதல், குத்தகைக்கு விடுதல், செய்து காண்பித்தல், பேணுதல் அல்லது பழுதுபார்த்தல் ஆகாது. இவ்வுட்பிரிவின்கீழ் ஓர் உரிமத்துக்கான விண்ணப்பமொன்று ஆணைக்குழுவால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்தில் ஆணைக்குழுவுக்குச் செய்யப்படுதல் வேண்டும்:";

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் —

(அ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில், "விதித்துரைக்கப்பட்ட படிவத்திலும் அதிகாரியினால் அல்லது அதற்கென அவரால் அதிகாரமளிக்கப்பட்ட ஒரு அலுவலரால் கையொப்பமிடப்பட்டதாயும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அதிகாரியினால் அல்லது அதற்கென அவரால்



அதிகாரமளிக்கப்பட்ட ஒரு அலுவலரால் கையொப்பமிடப்பட்டதாய்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் ; அத்துடன்

(ஆ) அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாகப் பின் வரும் பந்தியை இடுவதன்மூலம் :—

"(இ) ஆணைக்குழுவால் அதன்பொருட்டு செய்யப்பட்ட விதிகளால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய கொடுப்பனவின்மீதாதல் வேண்டும் ; அத்துடன்

(3) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவில் "அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கு, அதிகாரியின் முடிவு அவருக்கு அறிவிக்கப்பட்ட பின்னர் அத்திகதியிலிருந்து ஒரு மாதத்தினுள் மேன்முறையீடு செய்யலாம். அவர் அத்தகைய" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு, அதிகாரியின் முடிவு அவருக்கு அறிவிக்கப்பட்ட பின்னர் அத்திகதியிலிருந்து ஒரு மாதத்தினுள் மேன்முறையீடு செய்யலாம். அது அத்தகைய" என்னும் சொற்களை இடுவதன் மூலம்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவைத் திருத்துதல்.

21. முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலம் :—

"(1) ஆளெவரும் இலங்கையில் அல்லது இலங்கையின் ஆள்புல நீர்ப்பரப்பில் ஏதேனும் பாகத்தில் அல்லது இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட ஏதேனும் கப்பலில் அல்லது வானூர்தியில், (2) ஆம் உட்பிரிவின்கீழ் அந்நோக்கத்திற்கென ஆணைக்குழுவால் வழங்கப்பட்ட உரிமமொன்றின் அதிகாரத்தின்கீழ் தவிர, ஏதேனும் வானொலி அதிர்வெண்ணை

அல்லது வானொலி அதிர்வெண்ணை வெளியேற்றும் ஏதேனும் உபகரணத்தைப் பயன்படுத்துதல் ஆகாது. இப்பிரிவின்கீழான உரிமம் ஒன்றுக்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும் ஆணைக்குழுவால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்தில் ஆணைக்குழுவுக்குச் செய்யப்படுதல் வேண்டும்.

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் —

(அ) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலம் :—

"(அ) ஆணைக்குழுவின் இலச்சினையில் அல்லது அதன் சார்பாக ஆணைக்குழுவினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆலுவலரால் கையொப்பமிடப்பட்டதாகவுமிருத்தல் வேண்டும் ; ";

(ஆ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை நீக்கஞ்செய்து அதற்குப்பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலம் :—

"(ஆ) அதன் சார்பில் ஆக்கப்பட்ட விதிகளினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய கட்டணத்தின் கொடுப்பனவின்மீது வழங்கப்படுதல் வேண்டும் ;

ஆயின் ஆணைக்குழுவானது, இவ்வுட்பிரிவின் கீழ் ஓர் உரிமத்தை பின்வரும் எவருக்கும் அல்லது எதற்கும் அத்தகைய கட்டணக் கொடுப்பனவின்றி வழங்கலாம் :—

(i) இலங்கையிலுள்ள வெளிநாட்டு இராஜதந்திர தூதுவராலயம் ;

(ii) ஐக்கிய நாடுகளின் ஒரு முகவர் நிலையம் ;

(iii) காலத்துக்குக் காலம் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான ஏதேனும் வேறு சர்வதேச முகவர் நிலையம் அல்லது ஒழுங்கமைப்பு ;



(iv) பொலிசு, ஆயுதம் தாங்கிய படைகள் அல்லது; தேசிய பாதுகாப்பு நோக்கத்திற்காக அரசில் நேரடியாக ஊழியத்திலீடுபடுகின்ற வேறு சேவை, அவர்களின் அலுவலகக் கடமைகளைப் புரிகையில்.

(இ) அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியில் "விதித்துரைக்கப்பட்ட அலை அதிர்வெண் சாதனத்தைப் பயன்படுத்தல்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அத்தகைய வானொலி அலை அதிர்வெண் வெளியேற்றும் உபகரணத்தின் பொறியிடல் உள்ளடங்கலாகப் பயன்படுத்துதல்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் ";

(3) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவில் "அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கு அதிகாரியின் முடிவு, அவருக்கு அறிவிக்கப்பட்ட பின்னர், அத்திகதியிலிருந்து ஒரு மாதத்தினுள் மேன்முறையீடு செய்யலாம். அவர்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு அதிகாரியின் முடிவு, அவருக்கு அறிவிக்கப்பட்ட பின்னர், அத்திகதியிலிருந்து ஒரு மாதத்தினுள் மேன்முறையீடு செய்யலாம். அது" என்னும் சொற்களை இடுவதன்மூலம் ; அத்துடன்

(4) அப்பிரிவின் ஓரக் குறிப்பிற்குப் பதிலாகப் பின்வரும் ஓரக் குறிப்பை இடுவதன் மூலம் :—

"ஏதேனும் வானொலி அலை அதிர்வெண்ணை அல்லது வானொலி அலை அதிர்வெண்ணை வெளிப்படுத்தும் உபகரணத்தைப் பயன்படுத்துவதற்கான உரிமம்.".

**22.** பின்வரும் புதிய பிரிவு 22 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்னர் இத்தால் உட்புகுத்தப்படுகிறது என்பதுடன், அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 22அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 22அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

"கம்பிவட இணைப்பு வேலையைப் புரிவதற்கான உரிமம்

22அ. (1) ஆள் எவரும் ஏதேனும் வளவில் கம்பிவட இணைப்பு வேலையை (2) ஆம் உட்பிரிவின் கீழ் அந்நோக்கத்துக்காக ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட ஓர் உரிமத்தின் அதிகாரத்தின்கீழன்றி, புரிதலாகாது. இப்பிரிவின் கீழான உரிமமொன்றுக்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்தில் ஆணைக்குழுவுக்குச் செய்யப்படுதல் வேண்டும்.

(2) ஒராம் உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்ட ஓர் உரிமம் –

(அ) ஆணைக்குழுவினால் தீர்மானிக்கக் கூடியவாறான அத்தகைய படிவத்திலும், அத்தகைய கட்டணத்தின் கொடுப்பனவின்மீதும் இருத்தல் வேண்டும் ;

(ஆ) அத்தகைய உரிமத்தில் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைந்ததாதல் வேண்டும் ; அத்துடன்

(இ) அதன் சார்பாக ஆக்கப்பட்ட விதிகளினால் காலத்துக்குக் காலம் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தொழில்நுட்ப நியமங்களை உறுதிப்படுத்தத் தேவைப்படுத்தப்பட்டதாகவிருத்தல் வேண்டும்.

(3) ஆணைக்குழுவானது, எந்நேரத்திலும், இப்பிரிவின் கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் உரிமத்தை, உரிமத்தின் ஏதேனும் நியதிகளும் நிபந்தனைகளும் மீறப்படுமிடத்து, அல்லது உரிமம்பெறுநர் எந்தத் தொழில்நுட்ப நியமங்களை உறுதிப்படுத்துமாறு தேவைப்படுத்தப்பட்டுள்ளாரோ அந்த தொழில் நுட்ப நியமங்களுடன் இணங்கியொழுக அவர் தவறுமிடத்து, இல்லாதொழித்து முடிவுறுத்தலாம்.



(4) ஆணைக்குழு, (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஓர் உரிமத்திற்காகச் செய்யப்பட்ட ஒரு விண்ணப்பத்தை நிராகரிக்குமிடத்து, அல்லது (3) ஆம் உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்ட ஓர் உரிமத்தை இல்லாதொழிக்குமிடத்து, விண்ணப்பகாரர் அல்லது உரிமம்பெறுநர் விடயத்துக்கேற்றவாறு ஆணைக்குழுவின் முடிவு அவருக்கு அறிவிக்கப்பட்ட பின்னர், அத் திகதியிலிருந்து ஒரு மாதத்தினுள் அத்தகைய நிராகரித்தலுக்கு அல்லது இல்லாதொழிப்புக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு, மேன்முறையீடு செய்யலாம். மேன்முறையீட்டு நீதிமன்றம் ஆணைக்குழுவின் முடிவை உறுதிப்படுத்தலாம், அல்லது தள்ளுபடி செய்யலாம்.

(5) ஒராம் உட்பிரிவின் கீழ் விதிக்கப்பட்ட விலக்கு, கம்பிவட இணைப்பு வேலையைப் புரிவதில் இப்பிரிவின் கீழ் ஓர் உரிமம் வைத்திருப்பவரினால் ஊழியத்திலீடுபடுத்தப்பட்ட ஆட்கள் தொடர்பிலும் அத்துடன் உரிமம் வைத்திருப்பவரின் மேற்பார்வையின் கீழ் அத்தகைய வேலையைக் கொண்டு நடாத்தும் ஆட்கள் தொடர்பிலும் செயற்பட மாட்டாது.

(6) இப்பிரிவின் கீழ்—

(அ) உரிமம்பெறுநர், கம்பிவட இணைப்பு வேலையை எந்தவகையான வளவில், அல்லது வளவின்மீது புரியலாம் என குறித்துரைக்கும் ; அத்துடன்

(ஆ) கம்பிவட இணைப்பு வேலையைப் புரிவதற்காக ஊழியத்திலமர்த்தப்பட்டுள்ள எவரேனும் ஆளின் வேலையை, ஓர் உரிமம்பெறுநர் மேற்பார்வை செய்யக்கூடிய முறையைக் குறித்துரைக்கும்,

விதிகள் ஆக்கப்படலாம். ”

முதன்மைச் சட்டவாக்கத்தில் IIஅ அத்துடன் IIஆ என்னும் புதிய பாகங்களை உட்புகுத்தல்.

23. பின்வரும் புதிய பாகங்கள் 22அ என்னும் பிரிவை உடனடுத்துப் பின்னர் இத்தால் உட்புகுத்தப்படுகின்றன என்பதுடன் அவை முதன்மைச் சட்டவாக்கத்தின் பாகம் IIஅ அத்துடன் பாகம் IIஆ ஆகப் பயனுறுதலும் வேண்டும் :—

பாகம் IIஅ

## ஆணைக்குழுவின் பணியாட்டொகுதி

தொலைத் தொடர்பு பணிப்பாளர் தலைமை யதிபதி.

22ஆ. (1) அமைச்சரானவர், (இச்சட்டத்தில் "பணிப்பாளர் தலைமையதிபதி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) தொலைத்தொடர்பு பணிப்பாளர் தலைமையதிபதியாக ஓர் ஆளை நியமித்தல் வேண்டும். அவர் ஆணைக்குழுவின் பிரதான நிறைவேற்று அலுவலராக இருத்தல் வேண்டும். பணிப்பாளர் தலைமையதிபதியின் ஊதியம் உள்ளடங்கலாக ஊழியத்தின் நிபந்தனைகள் அமைச்சரினால் தீர்மானிக்கப் படுதல் வேண்டும்.

(2) பணிப்பாளர் தலைமையதிபதி, ஆணைக் குழுவின் பொதுப் பணித்தல்களுக்கும் கட்டுப்பாட்டிற்கும் அமைவாக ஆணைக்குழு வின் அலுவல்களினதும் கொடுக்கல் வாங்கல்களினதும் பணித்தல் அத்துடன் அதன் தத்துவங்களையும் கடமைகளையும் பிரயோகித் தல், புரிதல் அத்துடன் ஆணைக்குழுவின் ஊழியர்களின் நிருவாகம் கட்டுப்பாடு என்பவற்றுடன் பொறுப்பிக்கப்படுதல் வேண்டும்.

(3) பணிப்பாளர் தலைமையதிபதி, ஆணைக் குழுவின் அங்கீகாரத்துடன், அவர் அவ்வாறு செய்வது அவசியமானதெனக் கருதுகின்ற போதெல்லாம், எவரேனும் ஊழியருக்கு இச்சட்டத்தின் மூலம் அவர் மீது சுமத்தப்பட்ட அல்லது உரித்தாக்கப்பட்ட ஏதேனும் தத்து வத்தை அல்லது கடமையைக் கையளிக்கலாம் என்பதுடன் அத்தகைய ஊழியர் அத்தகைய தத்துவத்தை அல்லது கடமையை, பணிப்பாளர் தலைமையதிபதியின், பொது அல்லது விசேட பணித்தல்களுக்கு அமைவாகப் பிரயோகித் தலும் புரிதலும் வேண்டும்.

(4) அமைச்சரானவர் (1) ஆம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட பணிப்பாளர் தலைமையதிபதி யைப் பதவியிலிருந்து அகற்றலாம்.



ஆணைக்குழு வின் பணியாட் டொகுதி.

22இ. (1) ஆணைக்குழு இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக –

(அ) ஆணைக்குழுவின் தத்துவங்களை, கடமை களை பிரயோகிப்பதற்கு அல்லது புரிவதற்கு அவசியமானதென அவர் கருதுகின்றவாறான அத்தகைய அலுவலர்களையும் சேவையாளர்களை யும் நியமிக்கலாம் என்பதுடன் அத்த கைய அலுவலர்களையும் சேவையாளர் களையும் பதவியகற்றலாம் என்பதுடன் அவர்கள்மீது ஒழுக்காற்றுக் கட்டுப் பாட்டையும் பிரயோகிக்கலாம் ;

(ஆ) அத்தகைய அலுவலர்களுக்கும் சேவையா ளர்களுக்கும் வழங்கப்படவேண்டிய ஊதியத்தின் வீதத்தை நிர்ணயிக்கலாம்.

(இ) அத்தகைய அலுவலர்களினதும் சேவை யாளர்களினதும் சேவை நியதிகளையும் நிபந்தனைகளையும் தீர்மானிக்கலாம் ; அத்துடன்

(ஈ) அத்தகைய அலுவலர்களினதும் சேவை யாளர்களினதும் நலனுக்கான சகாய நிதியங்களை அல்லது செயற்றிட்டங் களைத் தாபித்து ஒழுங்குபடுத்தி, ஆணைக்குழுவின் நிதியத்திலிருந்து ஏதேனும் அத்தகைய நிதியங்களுக்கு உதவு தொகைகளைச் செய்யலாம்.

(2) ஆணைக்குழு, (1) ஆம் உட்பிரிவில் குறிப் பீடு செய்யப்பட்ட கருமங்கள் எல்லாவற்றின தும் அல்லது அவற்றுள் ஏதேனும் தொடர் பாக விதிகளை ஆக்கலாம்.

பகிரங்க சேவையிலுள்ள அலுவலர்களை ஆணைக்குழு வின் பணியாட் டொகுதிக்கு நியமித்தல்.

22ஈ. (1) ஆணைக்குழுவின் வேண்டுகோளின் பேரில் 65ஆ அல்லது 65இ என்னும் பிரிவு ஏற்புடையதாகவிருக்கும் ஒரு பகிரங்க அலுவலர், தவிர்ந்த பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர், அந்த அலுவலரினதும், பொது நிருவாகம் என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செய

லாளரினதும் சம்மதத்துடன் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய காலத்திற்கு ஆணைக்குழுவின் பணியாட்டொகுதிக்கு, அதேபோன்று சம்மதத்துடன் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(2) ஒராம் உட்பிரிவின் கீழ் ஆணைக்குழுவின் பணியாட்டொகுதிக்கு, பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் தற்காலிகமாக நியமிக்கப்படுமிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்கத் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் 14 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், அத்தகைய அலுவலர் தொடர்பாக ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடைத்தாதல் வேண்டும்.

(3) ஒராம் உட்பிரிவின் கீழ் ஆணைக்குழுவின் பணியாட்டொகுதிக்கு பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர், நிரந்தரமாக நியமிக்கப்படுமிடத்து 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்கத் தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவின் 14 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், அத்தகைய அலுவலர் தொடர்பில் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடைத்தாதல் வேண்டும்.

(4) ஒரு குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்கு அரசாங்கத்திற்கு சேவைபுரிய உடன்பட்டுள்ள எவரேனும் ஆளை ஆணைக்குழு தொழிலுக்கமர்த்துமிடத்து, அவ்வாளினால் ஆணைக்குழுவுக்கு ஆற்றிய ஏதேனும் சேவைக்காலப் பகுதியானது, அத்தகைய உடன்படிக்கையின் கட்டுப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்திற்காக அரசாங்கத்திற்கு ஆற்றிய சேவையாகக் கருதப்படுதல் வேண்டும்.



ஆணைக்குழுவின் பணியாட்டொகுதிக்குப் பகிரங்கக் கூட்டுத்தாபனங்களின் அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமித்தல்.

22உ. (1) ஆணைக்குழுவின் வேண்டுகோளின் பேரில், பகிரங்கக் கூட்டுத்தாபனத்திலுள்ள எவரேனும் அலுவலர் அல்லது சேவையாளர், அத்தகைய அலுவலரினதும் அல்லது சேவையாளரினதும், அத்துடன் அத்தகைய கூட்டுத்தாபனத்தின் ஆளும் சபையினதும் சம்மதத்துடன், ஆணைக்குழுவால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப் பகுதிக்கு, ஆணைக்குழுவின் பணியாட்டொகுதிக்கு அதேபோன்ற சம்மதத்துடன் தற்காலிகமாக நியமிக்கப்படலாம், அல்லது, ஆணைக்குழுவினாலும் அத்தகைய கூட்டுத்தாபனத்தின் ஆளும் சபையினாலும் உடன்பட்டவாறான, ஒய்வூதியம் அல்லது சகாயநிதிய உரிமைகள் தொடர்பானவை உள்ளடங்கலாக, அத்தகைய நியதிகளினதும் நிபந்தனைகளினதும் மீது அத்தகைய பணியாட்டொகுதிக்கு அதேபோன்ற சம்மதத்துடன் நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(2) ஆணைக்குழுவின் பணியாட்டொகுதிக்கு (1) ஆம் உட்பிரிவின் கீழ் தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ எவரேனும் ஆள் நியமிக்கப்படுமிடத்து, அவர், பணியாட்டொகுதியின் வேறு எவரேனும் உறுப்பினர் போன்று அதே ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டிற்கு அமைந்தவராதல் வேண்டும்.

## பாகம் IIஆ

### ஆணைக்குழுவின் நிதியம்

ஆணைக்குழுவின் நிதியம்.

22ஊ. (1) ஆணைக்குழு அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) பின்வருவன நிதியத்திற்குச் செலுத்தப்படுதல் வேண்டும்:—

(அ) ஆணைக்குழுவின் பயன்பாட்டுக்கென பாராளுமன்றத்தினால், காலத்துக்குக் காலம் வாக்களிக்கப்படக் கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத் தொகைகளும்;

(ஆ) இச்சட்டத்தின் 17, 21, அத்துடன் 22 ஆம் பிரிவுகளின் கீழ் கட்டணங்களாகச் செலுத்தப்பட்க்கூடியவாறான எல்லாப் பணத்தொகைகளும்;

(இ) 22எ என்னும் பிரிவின் கீழ் விதிக்கப்பட்ட தீர்வையின் வருவாய்கள்; அத்துடன்

(ஈ) இலங்கையிலுள்ள அல்லது இலங்கைக்கு வெளியே உள்ள, எத்தன்மைத்தான ஏதேனும் மூலத்திலிருந்தேனும் நன் கொடைகள் கொடைகள் அல்லது மானியக்கொடைகள் என்றவகையில் ஆணைக்குழுவினால் பெற்றுக் கொள் ளப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்.

(3) ஆணைக்குழு அதன் தத்துவங்களையும் கடமைகளையும் பிரயோகிக்கையில் அதனால் உறப்பட்ட செலவினத்தை ஈடுசெய்வதற்குத் தேவைப்படக் கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் ஆணைக்குழுவின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

ஆண்டு மொத்த விற்பனவுமீது தீர்வை விதித்தல்.

22எ. (1) கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம், நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவிருக்கும் அமைச்சரின் ஒருப்பாட்டுடன் காலத்துக்குக் காலம் அமைச்சரினால் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய வீதத்தில் ஒரு தீர்வை இயக்குநரின் ஆண்டு மொத்த விற்பனையின்மீது அறவிடப்படுதல், விதிக்கப்படுதல் அத்துடன் செலுத்தப்படுதல் வேண்டும்.

(2) இப்பிரிவின்கீழ் விதிக்கப்பட்ட தீர்வையின் தொகை அதேபோன்ற ஒரு கட்டளைமூலம் வேறுபடுத்தப்படலாம் அல்லது நீக்கஞ்செய் யப்படலாம்.

(3) இப்பிரிவின் கீழ் அமைச்சரினால் ஆக்கப்படும் கட்டளை ஒவ்வொன்றும், கசெற்றில் அதன் வெளியீட்டுத் திகதியன்று



அல்லது அதில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய திகதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டுமென்பதுடன் அதன் வெளியீட்டுத் திகதியிலிருந்து நாலு மாத காலத்தினுள் அங்கீகாரத்திற்கெனப் பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத கட்டளை எதுவும், அங்கீகாரம் மறுக்கப்பட்ட திகதியிலிருந்து, அதன்கீழ் முன்னர் செய்யப் பட்ட எதற்கும் பங்கமின்றி நீக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) இப்பிரிவின் கீழ் விதிக்கப்பட்ட தீர்வையானது வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்ட, வேறு ஏதேனும் வரி அல்லது தீர்வைக்கு மேலதிகமானதாகவிருத்தல் வேண்டும்.

நிதியாண்டு.

22ஏ. ஆணைக்குழுவின் நிதியாண்டு பஞ் சாங்க ஆண்டாதல் வேண்டும்.

கணக்குகளின் கணக்காய்வு

22ஐ. (1) ஆணைக்குழுவானது, ஆணைக்குழுவின் வருமானம் அத்துடன் செலவினம், சொத்துக்கள் அத்துடன் பொறுப்புக்கள் அத்துடன் அதன் வேறெல்லாக் கொடுக்கல் வாங்கல் பற்றிய செவ்வையான கணக்குப் புத்தகங்களை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(2) பகிரங்கக் கூட்டுத்தாபனங்களின் கணக்குகளைக் கணக்காய்வு செய்தல் தொடர்பிலான அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள், ஆணைக்குழுவின் கணக்குகளின் கணக்காய்வுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 27 ஆம் பிரிவை நீக்குதல்.

24. முதன்மைச் சட்டவாக்கத்தின் 27 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தில் பாகம் VIஅ என்னும் புதிய பாகத்தை உட்புகுத்துதல்.

25. பின்வரும் புதிய பாகம், 65 ஆம் பிரிவை உள்ளடுத்து பின்னர் இத்தால் உட்புகுத்தப்படுகிறது என்பதுடன் முதன்மைச் சட்டவாக்கத்தின் பாகம் VIஅ எனப் பயனுறுதலும் வேண்டும்.

பாகம் VIஅ

தொலைத் தொடர்பு பணிப்பாளரினால் முன்னர் பிரயோகிக்கப் பட்ட அல்லது புரியப்பட்ட அதிகாரியின் தத்துவங்களையும் கடமைகளையும் ஆணைக்குழு பிரயோகித்தலும் புரிதலும்.

65அ. நியமிக்கப்பட்ட திகதியன்று அல்லது அதற்கு முன்னர் —

(அ) இச்சட்டத்தின் 24 ஆம் பிரிவினால் நீக்கஞ் செய்யப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 27(அ) என்னும் பிரிவின் கீழான, ஏதேனும் தத்துவத்தை, பணியை அல்லது கடமையை அதிகாரி பிரயோகித்திருக்கின்ற, நிறைவேற்றியிருக்கின்ற அத்துடன் புரிந்திருக்கின்றவிடத்து அத்தகைய தத்துவம், பணி அல்லது கடமை, எல்லா நோக்கங்களுக்காகவும், ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட திகதியிலிருந்து பயனுறுவதாகப் பிரயோகிக்கப்பட்டு அல்லது நிறைவேற்றப்பட்டுள்ளது அத்துடன் புரியப்பட்டுள்ளதெனக் கருதப்படுதல் வேண்டும்; அத்துடன்.

(ஆ) இச்சட்டத்தின் 4ஆம் பிரிவினால் நீக்கஞ்செய்யப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 2ஆம் பிரிவின் கீழ் (முழுமையான பெயர் மூலமாயினுஞ்சரி, பதவிப்பெயர் மூலமாயினுஞ்சரி, அல்லது "பணிப்பாளர் தலைமையதிபதி"யென்ற சுருக்க முறையிலான பதவிப் பெயர் மூலமாயினுஞ்சரி), நியமிக்கப்பட்ட தொலைத்தொடர்பு பணிப்பாளர் தலைமையதிபதி, ஏதேனும் எழுத்திலான சட்டத்தில், இச்சட்டத்தின் 24ஆம் பிரிவினால் நீக்கஞ் செய்யப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 27(ஆ) என்னும் பிரிவின் கீழ் ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்ட அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஏதேனும் அறிவித்தலில் அல்லது வேறு ஆவணத்தில் அல்லது படிவத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் "தொலைத் தொடர்புப் பணிப்பாளர் தலைமையதிபதி" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஆணைக்குழு" என்னும் சொல் இடப்படுதல் வேண்டும்.



அதிகாரியின் சேவையில் உள்ள பகிரங்க அலுவலரினால் இயைபான திகதிக்கு முன்னர் கொடுக்கப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட அறிவித்தல்.

65ஆ. (1) நியமிக்கப்பட்ட திகதிக்கு நேர் முந்திய நாளன்று, அல்லது அதற்கு முன்னர் அரசாங்கத்தின் மாற்றத்திற்குரிய சேவையொன்றில், அத்தகைய எவரேனும் அலுவலராக இல்லாதவரும் அதிகாரியின் சேவையில் இருந்தவருமான பகிரங்க அலுவலர் ஒவ்வொருவருக்கும் இப்பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(2) ஒராம் உட்பிரிவு ஏற்புடையதாகின்றவரும் ஒய்வூதியங்கள் மீதான குறிப்புகளின் கீழ் ஒய்வூதியம் கொடுபடற்பாலதென வெளிப்படுத்தப்பட்ட ஒரு பதவியை வகிக்கின்றவருமான பகிரங்க அலுவலர் ஒவ்வொருவரும், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சரினால் நிர்ணயிக்கக் கூடியவாறான அத்தகைய திகதிக்கு முன்னர், ("இயைபான திகதி" யென இப்பிரிவில் இதனகத்துப் பின்னர் குறிப்பீடு செய்யப்படும்) இரு வாரங்களுக்குக் குறையாமல், அத்தகைய பகிரங்க அலுவலர் அத்திகதியன்று—

(அ) பகிரங்க அலுவலரொருவராகத் தொடர்ந்து பதவியிலிருப்பதற்கு, அல்லது

(ஆ) ஒய்வூதியம் பெறப்படற்பாலதான அலுவலரொருவ்ராக இருந்துகொண்டு அத்திகதியன்று பத்தாண்டுகளுக்குக் குறையாத ஒய்வூதியத்துக்குரித்துடையதான சேவையை அவர் கொண்டிருந்திருப்பின், பகிரங்க சேவையிலிருந்து ஒய்வுபெற்று, ஆணைக்குழுவின் ஊழியரொருவ்ராக வருவதற்கு; அல்லது

(இ) ஓய்வூதியம் பெறப்படற்பாலதான அலுவலரொருவராக அத்திகதியன்று பத்தாண்டுகளுக்குக் குறைவான ஓய்வூதியத்துக்குரித்துடையதான சேவையை உடையவராக இருந்திருப்பின், பகிரங்க சேவையிலிருந்து ஓய்வுபெற்று, ஆணைக்குழுவின் ஊழியரொருவராக வருவதற்கு; அல்லது

(ஈ) அவர் பகிரங்க சேவை சகாய நிதியக் கட்டளைச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட பகிரங்க சேவை சகாய நிதியத்திற்கு உதவுதொகை செலுத்துநர் ஒருவராக இருப்பின், பகிரங்க சேவையை விட்டு நீங்கி ஆணைக்குழுவின் ஊழியரொருவராக வருவதற்கு, அல்லது

(உ) பகிரங்க சேவையிலிருந்து ஓய்வு பெற்றும் அத்துடன் அதனை விட்டு நீங்கியும் ஆணைக்குழுவின் ஊழியரொருவராக வருவதற்கு,

முன்றுகின்றாரென ஆணைக்குழுவிற்கு எழுத்தில் அறிவித்தல் கொடுத்தல் வேண்டும்.

(3) அதிகாரியின் பகிரங்க அலுவலரொருவரினால் (2) ஆம் உட்பிரிவின் கீழ் இயைபான திகதிக்கு முன்னர் ஆணைக்குழுவிற்குக் கொடுக்கப்படும் அறிவித்தலொன்று இறுதியானதாதல் வேண்டும்.

(4) இயைபான திகதிக்கு முன்னர் (2) ஆம் உட்பிரிவின் (ஆ), (இ), (ஈ), அல்லது (உ) என்னும் பந்தியின் கீழ் தேவைப்படுத்தப்பட்ட அறிவித்தலைக் கொடுக்காத அல்லது (2) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் கீழ் அத்தகைய அறிவித்தலைக் கொடுக்கின்ற பகிரங்க அலுவலர் எவரும் அத்திகதியன்றும் அதற்குப் பின்னரும் பகிரங்க அலுவலரொருவராகத் தொடர்ந்திருத்தல் வேண்டும்.



(5) இரண்டாம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட பகிரங்க அலுவலரொருவர், அத்தகைய பதவியில் அவர் தொடர்ந்திருக்கும் வரை, அத்தகைய அலுவலர் என்ற தன்மையில் ஆணைக்குழுவுக்காகவும் அதன் சார்பிலும் வேலை புரிதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய அலுவலர் என்ற தன்மையில் அதிகாரிக்காக வேலை செய்யும்போது எந்தச் சேவை நிபந்தனைகளுக்கு உரித்துடையவராக இருந்தாரோ அதே சேவை நிபந்தனைகளுக்குத் தகுதியுடையவராதலும் வேண்டும்; அத்துடன் வேறு எவரேனும் பகிரங்க அலுவலர் போன்று அத்தகைய ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டிற்கு அமைந்தவராதலும் வேண்டும்.

(6) அதிகாரியின் சேவையிலிருந்த பகிரங்க அலுவலரெவரும் அத்தகைய அலுவலர் என்ற தன்மையில் ஆணைக்குழுவுக்காகவும் அதன் சார்பிலும் வேலை செய்பவராக, இயைபான திகதியன்றும் அதன் பின்னரும் அத்தகைய அலுவலராகப் பதவியில் தொடர்ந்திருக்கின்ற விடத்து, அத்தகைய அலுவலர் தொடர்பில் அரசாங்கத்தால் செலுத்தப்படற்பாலதான ஓய்வூதிய அல்லது சகாய நிதிய உதவு தொகைகள் உட்பட சம்பளத்தையும் வேறு செலவுகளையும் உள்ளடக்குவதற்குப் போதியதென நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரால் தீர்மானிக்கப் படக்கூடியவாறான, அத்தகைய தொகையை விஞ்சாத அத்தகைய பணத்தொகையைத் திரட்டு நிதியத்தில் வரவுவைப்பதற்கென, ஆணைக்குழுவானது, ஆணைக் குழுவின் நிதியத்திலிருந்து திறைசேரியின் பிரதிச் செயலாளருக்குச் செலுத்துதல் வேண்டும்.

(7) இயைபான திகதிக்கு முன்னர், (2) ஆம் உட்பிரிவின் (ஆ) அல்லது (இ) அல்லது (ஈ) அல்லது (உ) என்னும் பந்திகளின் கீழ் அறிவித்தல் கொடுக்கும் அதிகாரியின் சேவையிலுள்ள பகிரங்க அலுவலர் எவரும்—

(அ) அத்தகைய அறிவித்தல் அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் கீழ் அவரால் கொடுக்கப்படுமிடத்து, இயைபான திகதியிலிருந்தும் அதன் பின்னரும் ஆணைக்குழு ஊழியரொருவராதல் வேண்டும் என்பதுடன் அத்திகதியன்று பகிரங்க சேவையிலிருந்து அவர் ஓய்வுபெற்றுள்ளவராகக் கருதப்படுதலும் வேண்டும். அத்திகதியில் பதவி இல்லாதொழிக்கப்படுவதன் காரணமாக அவர் பகிரங்க சேவையிலிருந்து ஓய்வூதியம் பெற்றிருந்தால் ஓய்வூதியம் பற்றிய குறிப்புகளின் கீழ் அவருக்கு அளிக்கப் பட்டிருக்கக் கூடியவாறான அத்தகைய ஓய்வூதியமொன்றுக்குத் தகுதியுடைய வராதலும் வேண்டும்; அல்லது

(ஆ) அத்தகைய அறிவித்தல் அவ்வுட்பந்தியின் (இ) என்னும் பந்தியின் கீழ் அவரால் கொடுக்கப்படுமிடத்து, இயைபான திகதியிலிருந்தும் அதன் பின்னரும் ஆணைக்குழுவின் ஊழியரொருவராதல் வேண்டும் என்பதுடன், (9) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு, ஓய்வூதியம் கொடுபடற்பாலதான சேவையில் பத்து ஆண்டுகளைப் பூர்த்தி செய்துள்ள, திகதியன்று பகிரங்க சேவையை விட்டு விலகியுள்ளாரெனக் கருதப்படுதலும் வேண்டும் அத்துடன் ஓய்வூதியம் கொடுப்படற்பாலதான சேவையின் அத்தகைய காலத்தை முடிவுறுத்துவதன் மீது பதவி இல்லாதொழிக்கப்படுவதன் காரணமாக, அவர் பகிரங்க சேவையிலிருந்து ஓய்வுபெற்றிருந்தால், ஓய்வூதியம் பற்றிய குறிப்புகளின் கீழ், அவருக்கு அளிக்கப்பட்டிருக்கக்கூடியவாறான அத்தகைய அளிப்பிற்குத் தகுதியுடையவராதலும் வேண்டும்.



(இ) அத்தகைய அறிவித்தல் அவ்வுட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியின் கீழ் அவரால் கொடுக்கப்படுமிடத்து இயைபான திகதியிலிருந்தும் அதன் பின்னரும் ஆணைக்குழுவின் ஊழியரொருவராதல் வேண்டும் என்பதுடன், பகிரங்க சேவை சகாய நிதியத்தின் நோக்கங்களுக்காக, அத்திகதியன்று பதவியிலிருந்து விலக்கப்படுவதன் மூலம் அல்லாது வேறு வகையில் அரசாங்கத்தின் சம்மதத்துடன் ஒப்பந்தமொன்றின் முடிவுறுத்தலின் மீது அரசாங்க சேவையை விட்டு விலகியுள்ளவராகக் கருதப்படுதலும் வேண்டும்.

(ஈ) அத்தகைய அறிவித்தல், அவ்வுட்பந்தியின் (உ) என்னும் பந்தியின் கீழ் அவரால் கொடுக்கப்படுமிடத்தும், அத்துடன் —

(i) அவர் அவ்வுட்பந்தியின் (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்படும் வகுப்பை அல்லது விவரணத்தைச் சேர்ந்த பகிரங்க அலுவலரொருவராக இருப்பின், இயைபான திகதியன்று, பகிரங்க சேவையிலிருந்து ஓய்வு பெற்றுள்ளவராகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அத் திகதியன்று பதவி இல்லா தொழிக்கப்படுவதன் காரணமாக அவர் பகிரங்க சேவையிலிருந்து ஓய்வு பெற்றிருந்தால் ஓய்வூதியம் பற்றிய குறிப்புகளின் கீழ் அவருக்கு அளிக்கப்பட்டிருக்கக்கூடியவாறான அத்தகைய ஓய்வூதியத்திற்கு உரித்துடையவராதலும் வேண்டும்.

(ii) அவர் அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்படும் வகுப்பை அல்லது விவரணத்தைச் சேர்ந்த பகிரங்க அலுவலரொருவராக இருப்பின், இயைபான திகதியன்று, பகிரங்க சேவையை விட்டு விலகியுள்ளவராகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்திகதியன்று பதவி இல்லாதொழிக்கப் படுவதன் காரணமாக அவர் பகிரங்க சேவையிலிருந்து விலகியிருந்தால் ஒய்வூதியம் பற்றிய குறிப்புகளின் கீழ் அவருக்கு அளிக்கப்பட்டிருக்கக்கூடியவாறான அத்தகைய அளிப்பொன்றுக்கு அவர் உரித்துடையவராதலும் வேண்டும்;

(8) இப்பிரிவின் (4) ஆம் அத்துடன் (7) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கும் இச்சட்டத்தின் வேறு எவையேனும் ஏற்பாடுகளுக்கும் இடையே ஏதேனும் முரண்பாடு அல்லது ஒவ்வாமை இருக்கும் பட்சத்தில், அந்த உட்பிரிவுகளின் ஏற்பாடுகள், அத்தகைய முரண்பாட்டின் அல்லது ஒவ்வாமையின் அளவுக்கு அத்தகைய வேறு ஏற்பாடுகளின் மீது மேலோங்கி நிற்றல் வேண்டும்.

(9) ஏழாம் உட்பிரிவின் ஏற்பாடுகளின் செயற்பாட்டின் பயனாக இயைபான திகதியன்று ஆணைக்குழுவின் ஊழியரொருவரா்க வந்த அத்தகைய ஊழியர் ஒவ்வொருவரும் தொடர்பில், பின்வரும் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும் —



(அ) அத்தகைய ஊழியரினாலும் ஆணைக்குழுவினாலும் உடன்பட்டுக்கொள்ளப் பட்டவாறான, அத்தகைய நியதிகளின் மீது அத்தகைய ஊழியர் ஆணைக்குழுவினால் ஊழியத்தில் அமர்த்தப்படுதல் வேண்டும்.

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய நியதி நிபந்தனைகள் அத்தகைய ஊழியர், அதிகாரியினால் எந்நியதி நிபந்தனைகளின் கீழ் முன்னர், ஊழியத்தில் அமர்த்தப்பட்டாரோ, அந் நியதி நிபந்தனைகளுக்குக் குறைவான சாதகமானதாய் இருத்தலாகாது;

(ஆ) இயைபான திகதியன்று, அத்தகைய ஊழியர், ஒய்வூதியம் கொடுபடற்பாலதென வெளிப்படுத்தப்பட்ட பதவியொன்றை வகிக்கும் அதிகாரியின் சேவையில் உள்ள பகிரங்க அலுவலரொருவராகவும் பத்து ஆண்டுகளுக்கும் குறைவான ஒய்வூதியம் கொடுபடற்பாலதான சேவையை உடையவராகவும் இருந்தால்,

(i) அவர் ஒய்வூதியங்கள் மீதான குறிப்புகளின் நோக்கங்களுக்காக மட்டும் அதிகாரியின் கீழான அவருடைய ஒய்வூதியம் கொடுபடற்பாலதான சேவையுடன் சேர்த்துக்கொள்ளப்படும்போது, பத்தாண்டுகள் கூட்டுமொத்தத் தொகையொன்றாக ஒய்வூதியச் சேவையை ஆக்குகின்றவாறான அத்தகைய காலப்பகுதி வரைக்கும், இயைபான திகதியன்று, அவர் வகித்த அதே பதவியை அதிகாரியின் சேவையில் வகிப்பவராதல் வேண்டுமென்று கருதப்படுதல் வேண்டும்.

(அத்தகைய கூட்டு மொத்தத் தொகையைக் கணிப்பதற்கு அதிகாரியின் கீழான சேவையானது ஓய்வூதியம் கொடுபடற்பாலதான சேவையாக எடுத்துக் கொள்ளப்படுதல் வேண்டும்);

(ii) அவர் தொடர்பில், எச்சேவைக் காலப் பகுதியின்போது, ஓய்வூதியங்கள் மீதான குறிப்புகளின் நோக்கத்துக்காக இயைபான திகதியன்று அவர் வகித்த அதே பதவியை அதிகாரியின் சேவையில் வகிப்பவராதல் வேண்டுமென்று கருதப்படுகிறாரோ, அச்சேவைக் காலப்பகுதியின்போது பூர்த்தி செய்யப்பட்ட ஒவ்வொரு மாதத்திற்கும், நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினால் தீர்மானிக்கக் கூடியவாறான, அத்தகைய பணத்தொகைகளை, ஆணைக்குழுவின் நிதியிலிருந்து திரட்டு நிதியத்தில் வரவுவைக்கப் படுவதற்கெனத் திறைசேரியின் பிரதிச் செயலாளருக்கு ஆணைக்குழு கொடுப்பனவு செய்தல் வேண்டும்; அத்துடன்

(iii) ஒராம் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள காலப்பகுதியின் முடிவின்போது, பகிரங்க சேவையிலிருந்து அவர் ஓய்வு பெற்றுவிட்டாரெனக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய காலப் பகுதி முடிவுற்றதன் மேல், பதவி இல்லாதொழிக்கப்பட்ட ஏதுவின்மேல் பகிரங்க சேவையிலிருந்து அவர் ஓய்வு



பெற்றிருந்தாரானால் அவருக்கு அளிக்கப்பட்டிருக்கக்கூடியவாறான அத்தகைய ஓய்வூதியத்துக்கு, ஓய்வூதியங்கள் மீதான குறிப்புகளின் கீழ் அவர் தகவுடையவராதலும் வேண்டும்.

(10) (அ) ஆணைக்குழுவின் அலுவலர் என்ற வகையில், ஆணைக்குழுவுக்காகவும் அத்துடன் அதன் சார்பிலும் தொழில் புரிந்துகொண்டு பகிரங்க அலுவலரொருவராக, இயைபான திகதியன்றும் அதன் பின்னரும் பதவியில் தொடர்ந்திருக்கும் ஆளெவரும் எந்நேரத்திலும், அவரது சம்மதத்துடனும் ஆணைக்குழுவின் சம்மதத்துடனும் ஆணைக்குழுவின் பணியாட்டொகுதிக்கு நியமிக்கப்படலாம்.

(ஆ) (அ) என்னும் பந்தியின்கீழ் ஆணைக்குழுவின் பணியாட்டொகுதிக்கு அலுவலர் எவரும் நியமிக்கப்படுகின்றவிடத்து, (7) ஆம், (9) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகள், ஏற்றமாற்றங்களுடன் அவருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்புடையனவாதல் வேண்டும் என்பதுடன் இவ்வுட்பிரிவுகளில் காணப்படும் "இயைபான திகதி" என்ற குறிப்பீடு ஆணைக்குழுவின் பணியாட்டொகுதிக்கு அலுவலர் எந்தத் திகதியன்று நியமிக்கப்பட்டாரோ அந்தத் திகதியென பொருள்படுதலும் வேண்டும்.

மாற்றக்கூடிய சேவையிலுள்ள பகிரங்க அலுவலரை ஆணைக்குழுவின் சேவையிலமர்த்துதல்.

65இ. (1) நியமிக்கப்பட்ட திகதிக்கு நேர் முந்திய நாளன்று அரசாங்க சேவையில் மாற்றக்கூடிய சேவையிலிருந்த அதிகாரியின் எவரேனும் பகிரங்க அலுவலர், ஆணைக்குழுவின் பணியாட்டொகுதிக்கு நியமிக்கப்படுமிடத்து, 65ஆ என்னும் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்ற மாற்றங்களுடன் அத்தகைய அலுவலருக்கும் அவருடைய ஊழியம் தொடர்பிலும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கத்துக்காக 65ஆ என்னும் பிரிவிலுள்ள "இயைபான திகதி" க்கான குறிப்பீடு, அவ்வுட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட அலுவலர், ஆணைக்குழுவின் ஊழியரொருவராக எத்திகதியன்று வருகின்றாரோ அத் திகதியெனப் பொருள் படுதல் வேண்டும்.

"அதிகாரி" என்னும் பதத்தின் பொருள் கோடல்.

65ஈ இச்சட்டத்தின் இப்பாகத்தின் நோக்கத்திற்காக, "அதிகாரி" என்பது இச் சட்டத்தின் 4 ஆம் பிரிவினால் நீக்கஞ் செய்யப் பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டவாறான அதிகாரியெனப் பொருள்படும். ".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 68அ, 68ஆ, 68இ அத்துடன் 68ஈ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.

26. பின்வரும் புதிய பிரிவுகள் 68 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்னர் இத்தால் உட்புகுத்தப்படுகின்றன என்பதுடன் முதன்மைச் சட்டவாக்கத்தின் 68அ, 68ஆ, 68இ அத்துடன் 68ஈ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும் :

காணி கொள்ளல் சட்டத்தின் கீழ் ஆணைக் குழுவுக்காக அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளல்.

68அ. (1) ஏதேனும் அசைவற்ற ஆதனம் ஆணைக்குழுவின் ஏதேனும் நோக்கத்திற்காகக் கொள்ளப்படுவதற்கெனத் தேவைப்படுத்தப்பட்டும், அத்துடன் அமைச்சரானவர் கசெற்றில் வெளியிடும் கட்டளைமூலம் உத்தேசிக்கப்பட்ட கொள்ளலை அங்கீகரித்தும், உள்ளவிடத்து, அந்த ஆதனமானது, பொது நோக்கமொன்றிற்காகத் தேவைப்பட்டுள்ள தெனக் கருதப்படலாமென்பதுடன், அதற் கிணங்க, காணி கொள்ளல் சட்டத்தின் கீழ் கொள்ளப்படலாமென்பதுடன் ஆணைக்குழுவுக் குக் கைமாற்றவும் படலாம்.

(2) காணி கொள்ளல் சட்டத்தின் கீழ், ஆணைக்குழுவுக்கான அசைவற்ற ஆதனக் கொள்வனவுக்குச் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் பணத்தொகை, ஆணைக்குழுவின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.



அசைவுள்ளதும் அசைவற்றதுமான அரச ஆதனம் ஆணைக்குழுவுக்குக் கிடைக்கத்தக்கதாகச் செய்யப்படுதல் வேண்டும்.

68ஆ. (1) அரசின் ஏதேனும் அசைவற்ற ஆதனம் ஆணைக்குழுவின் நோக்கத்துக்குத் தேவைப்படுத்தப்படுமிடத்து, அந்நோக்க மான்து, முடிக்குரிய காணிகள் கட்டளைச் சட்டத்தின் 6 ஆம் பிரிவின் கீழ் எந்த நோக்கத்திற்கு அத்தகைய ஆதனத்தின் விசேட அளிப்பு அல்லது குத்தகை, செய்யப்பட லாமோ, அந்த நோக்கமொன்றாகக் கருதப்படு தல் வேண்டும்: அத்துடன் அதற்கிணங்க அக்கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள், ஆணைக்குழுவின் அத்தகைய ஆதனத்தின் விசேட அளிப்பொன்றுக்கு அல்லது குத்த கைக்கு ஏற்புடையதாதல் வேண்டும்.

(2) அரசின் ஏதேனும் அசைவுள்ள ஆதனம் ஆணைக்குழுவின் நோக்கத்துக்காகத் தேவைப்படுத்தப்படுமிடத்து, அமைச்சரானவர் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அத்தகைய அசையும் ஆதனத்தின் உடைமையையும் பயன்பாட்டையும் ஆணைக்குழுவுக்கு மாற்றி, உரித்தாக்கலாம்.

உறுப்பினர்களும் அலுவலர்களும் சேவையாளர்களும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

68இ. ஆணைக்குழுவின் எல்லா உறுப்பினர் களும் அலுவலர்களும் சேவையாளர்களும் தண்டனைச் சட்டக்கோவையின் கருத்துக்குட்பட வும் அதன் நோக்கங்களுக்காகவும், பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

ஆணைக்குழு அட்டவணைப்படுத்தப்பட்டதொரு நிறுவனமாகக் கருதப்படுதல் வேண்டும்.

68ஈ. இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக் குட்பட ஆணைக்குழுவானது அட்டவணைப் படுத்தப்பட்டதொரு நிறுவனமாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்கப் பொருள் கொள்ளப்படுதலும் வேண்டும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 73 ஆம் பிரிவைத் திருத்துதல்.

27. முதன்மைச் சட்டவாக்கத்தின் 73 ஆம் பிரிவு "பணிப்பாளர் தலைமையதிபதி" என்னும் சொற்றொடரின் வரைவிலக்கணத்திற்கு நேர் முன்னர் பின்வரும் வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகிறது:-

"கம்பி வட இணைப்பு வேலை" என்பது—

(அ) இயக்குநரொருவரினால், தொழிற்படுத்தப்படும் தொலைத் தொடர்புத் தொகுதியொன்றுக்குரிய தொடர்புக்கான வாடிக்கையாளர் கம்பி வட இணைப்பை நிறுவுதல்;

(ஆ) இயக்குநரொருவரினால் தொழிற்படுத்தப்படும் தொலைத் தொடர்புத் தொகுதியொன்றுக்கான வாடிக்கையாளர் கம்பிவட இணைப்பு; அல்லது

(இ) இயக்குநரொருவரினால் தொழிற்படுத்தப்படும் தொலைத் தொடர்புத் தொகுதியொன்றுக்கு இணைக்கப்படும் வாடிக்கையாளர் கம்பிவட இணைப்பைப் பேணுதல்,

எனப் பொருள்படும்;

"வாடிக்கையாளர் கம்பி வட இணைப்பு" என்பது—

(அ) இயக்குநரொருவரினால் தொழிற்படுத்தப்படும் தொலைத் தொடர்புத் தொகுதியொன்றுடன் இணைக்கப்படும் அல்லது இணைக்கப்படுவதற்கு முன்னப்படும் ;

அத்துடன்

(ஆ) (அ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட அத்தகைய ஏதேனும் தொலைத் தொடர்புத் தொகுதியின் எல்லைகளுக்கு அப்பால் பயன்படுத்தப்படுகின்ற அல்லது பயன்படுத் தப்பட முன்னுகின்ற

ஒரு கம்பி எனப் பொருள் படும்.

முதன்மைச் சட்டவாக் கத்திற்கு அட்டவணை யைச்செலுத் துதல்.

28. பின்வரும் அட்டவணை முதன்மைச் சட்டவாக்கத்தின் 74 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்னர் இத்தால் சேர்க்கப்படுகின்றது :—

## அட்டவணை

(பிரிவு 3 (2))

ஆணைக்குழுவின் நியமிக்கப்பட்ட உறுப்பினர் தொடர்பான ஏற்பாடுகள்.

1. ஆளொருவர் பின்வரும் சந்தர்ப்பங்களில் ஆணைக்குழு உறுப்பினராக நியமிக்கப்படுவதிலிருந்து அல்லது தொடர்ந்திருப்பதிலிருந்து தகைமையிழந்தவராதல் வேண்டும்.



(அ) அவர், பாராளுமன்றத்தின், மாகாண சபையொன்றின் அல்லது ஏதேனும் உள்ளூரதிகார சபையின் உறுப்பினரொருவராக இருந்தால் அல்லது வந்தால் ; அத்துடன்

(ஆ) அவர், இலங்கையில் அல்லது வேறேதேனும் நாட்டில் வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின் கீழ் சித்த சுவாதீனமுற்றவராகக் காணப்படின் அல்லது வெளிப்படுத்தப்படின்,

2. ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒவ்வொருவரும், இறப்பினால் பதவி விலகலினால் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதனால் முன்னரே அவர் பதவியை வறிதாக்கினாலன்றி, அவரது நியமனத் திகதியிலிருந்து மூன்று வருட காலப்பகுதியொன்றுக்குப் பதவி வகித்தல் வேண்டும் என்பதுடன் பதவியிலிருந்து அவர் அகற்றப்பட்டிருந்தாலன்றி மீள் நியமனத்திற்குத் தகவுடையவராதலும் வேண்டும்.

3. அமைச்சரானவர், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம், நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவரை —

(அ) அவர் ஓராம் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் தகைமையீனங்களுக்கு அமைந்தவராக வருமிடத்து,

(ஆ) அவர் தனது கடமைகளை நிரந்தரமாகப் புரிய முடியாதவராக வருமிடத்து அல்லது,

(இ) அவர், அவரது கடமைகளை நிறைவேற்றுகையில், சட்ட முரணான செயலொன்றாக, மிக்க துர் நடத்தையாக அல்லது அசட்டையாக அமைகின்ற ஏதேனும் செயலை அல்லது காரியத்தை செய்திருந்தவிடத்து,

பதவியிலிருந்து அகற்றலாம்.

4. ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவர், அமைச்சருக்கு முகவரியிடப்பட்ட, அப்பயனுக்கான ஒரு கடிதம் மூலம், அவரது பதவியினின்று எந்நேரத்திலும் விலகலாம் என்பதுடன் அத்தகைய பதவி விலகல் அமைச்சரினால் எழுத்தில் ஏற்றுக்கொள்ளப்படுவதன் மேல் பயனுறுதலும் வேண்டும்.

5. நியமிக்கப்பட்ட ஓர் உறுப்பினர், ஆணைக்குழுவின் உறுப்பினர்களின் அபிப்பிராயத்தில் போதுமானதெனக் கருதப்பட்ட காரணமின்றி, ஆணைக்குழுவின் அடுத்து வருகின்ற மூன்று கூட்டங்களுக்கு வருகை தராததன் மேல் பதவியை வறிதாக்கியுள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டும்.

6. பதவியை வறிதாக்குகின்ற அல்லது வறிதாக்குகின்றாரெனக் கருதப்பட்ட ஆணைக்குழுவின் ஓர் உறுப்பினர், அவர் பதவியை வறிதாக்குகின்ற திகதியன்று அல்லது அவரது பதவியை அவர் வறிதாக்கியுள்ளாரென கருதப்படுகின்ற திகதியன்று, ஆணைக்குழுவின் முன்னர் முடிவுறாதிருக்கும் ஏதேனும் விடயத்தில், எவரேனும் ஆள் சார்பில் பதவியை வறிதாக்கிய அத்தகைய திகதியிலிருந்து இரு வருட காலங்களுக்கு பங்குபற்றாதிருத்தல் வேண்டும் என்பதுடன் அவர் ஓர் உறுப்பினராக இருந்தபோது, தான் பங்குபற்றிய ஏதேனும் விடயத்தில் எவ்வாளினதும் சார்பில் பங்குபற்றுதலாகாது.

7. ஆணைக்குழுவின் நியமிக்கப்பட்ட ஓர் உறுப்பினர் இறக்கின்றவிடத்து, பதவி விலகுகின்றவிடத்து, பதவியிலிருந்து அகற்றப்படுகின்றவிடத்து அல்லது பதவியை வறிதாக்கியுள்ளதாகக் கருதப்படுகின்றவிடத்து, அமைச்சரானவர் இச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியின் ஏற்பாடுகள் தொடர்பாக அத்தகைய உறுப்பினரை அடுத்துறுவதற்கு எவரேனும் வேறு ஆளை நியமிக்கலாம். அத்தகைய உறுப்பினரின் இடத்திற்கு நியமிக்கப்பட்ட எவரேனும் வேறு ஆள், அவர் எந்த உறுப்பினரை அடுத்துறுகின்றாரோ அந்த உறுப்பினரின் முடிவுறாதிருக்கும் பதவிக் காலத்திற்கு பதவி வகித்தல் வேண்டும்.

8. ஆணைக்குழுவின் உறுப்பினரொருவர், சுகவீனம், உடற்றகுதியீனம், அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாகத் தமது பதவிக்குரிய பணிகளை நிறைவேற்றுவதற்குத் தற்காலிகமாக இயலாதவராக வருமிடத்து, அத்தகைய இயலாமையை எழுத்தில் அமைச்சருக்கு அறிவித்தல் அத்தகைய உறுப்பினரின் கடமையாதல் வேண்டும். அதன்மீது அமைச்சரானவர், இச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளுக்கு அமைவாக முறையான கவனமெடுத்து, அவர் வருகை தராத காலத்தில் செயலாற்றுவதற்கென வேறு ஆளை நியமிக்கலாம்.



29. நியமிக்கப்பட்ட திகதியிலிருந்தும் அதற்குப் பின்னரும்–

அதிகாரியினால் வழங்கப்பட்ட உரிமம் சொந்தமாக்கப்பட்ட ஆதனம் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள், செய்து கொள்ளப்பட்ட கட்டளைகள், தொடுக்கப்பட்ட வழக்குகள் என்பன ஆணைக்குழுவினால் செய்யப்பட்டவையாகக் கருதப்படுதல் வேண்டும்.

(அ) முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவின் கீழ் அதிகாரியின் விதப்புரையின்மீது அமைச்சரினால் வழங்கப்பட்டு, நியமிக்கப்பட்ட திகதிக்கு நேர் முந்திய நாளன்று வலுவிலுள்ள ஒவ்வொரு உரிமமும் எல்லா நோக்கங்களுக்காகவும் ஆணைக்குழுவின் விதப்புரையின் மீது வழங்கப்பட்ட ஓர் உரிமமாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் ஒவ்வொரு அத்தகைய உரிமமும் வலுவுடையதாகவும் பயனுடையதாகவும் இருத்தல் வேண்டும் என்பதுடன் அது முடிவடையும் வரை தொடர்ந்து வலுவிலிருத்தல் வேண்டும்.

(ஆ) முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 அல்லது 22 ஆம் பிரிவின் அதிகாரியினால் வழங்கப்பட்டு நியமிக்கப்பட்ட திகதிக்கு நேர்முந்திய நாளன்று வலுவிலுள்ள உரிமம் ஒவ்வொன்றும், எல்லா நோக்கங்களுக்காகவும் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட ஓர் உரிமமாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் ஒவ்வொரு அத்தகைய உரிமமும் வலுவுடையதாகவும் பயனுறுதலுடையதாகவும் இருத்தல் வேண்டும் என்பதுடன் அது முடிவடையும்வரை வலுவில் தொடர்ந்திருத்தல் வேண்டும்.

(இ) நியமிக்கப்பட்ட திகதிக்கு நேர்முந்திய நாளன்று அல்லது அதற்கு முன்னர் அதிகாரிக்குச் சொந்தமாயிருந்த அல்லது அவரின் உடைமையிலிருந்த அசைவுள்ள அத்துடன் அசைவற்ற எல்லா ஆதனமும், ஆணைக்குழுவிற்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் ஆணைக்குழுவின் ஆதனமாகக் கருதப்படுதல் வேண்டும்.

(ஈ) அதிகாரியினால் அதிகாரியுடன் அல்லது அதிகாரிக்காகச் செய்துகொள்ளப்பட்ட எல்லா ஒப்பந்தங்களும், உடன்படிக்கைகளும், ஆணைக்குழுவினால், அல்லது அத்துடன் அல்லது அதற்காகச் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தங்க

ளாகவும் உடன்படிக்கைகளாகவும் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் நியமிக்கப்பட்ட திகதிக்கு நேர்முந்திய நாளன்று உளதான அதிகாரியின் எல்லா உரிமைகளும் சிறப்புரிமைகளும் கடப்பாடுகளும், கடன்களும், பொறுப்புக்களும் ஆணைக்குழுவின் உரிமைகள், சிறப்புரிமைகள், கடப்பாடுகள், கடன்கள் அத்துடன் பொறுப்புக்க ளாகக் கருதப்படுதல் வேண்டும்.

(உ) அதிகாரியினால் அல்லது அதிகாரிக்கெதிராகத் தொடுக்கப்பட்ட, நியமிக்கப்பட்ட திகதிக்கு நேர்முந்திய நாளன்று முடிவுறாதிருக்கும் எல்லா வழக்குகளும் வேறு வழக்கு நடவடிக்கைகளும், ஆணைக்குழுவினால் அல்லது அதற்கெதிராகத் தொடுக்கப்பட்ட வழக்குகள் அத்துடன் வழக்கு நடவடிக்கைகளாக கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய வழக்கு அத்துடன் வழக்கு நடவடிக்கைகள் ஒவ்வொன்றும் அதற்கிணங்க நடாத்தப்படலாம் அத்துடன் வலுவுக்கிடப்படலாம்.

(ஊ) நியமிக்கப்பட்ட திகதிக்கு நேர்முந்திய நாளன்று அல்லது அதற்கு முன்னர், முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவின் கீழ் அதிகாரியினால் ஆக்கப்பட்ட ஒவ்வொரு கட்டளையும் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட கட்டளையொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்; என்பதுடன்

(எ) முதன்மைச் சட்டவாக்கத்தின் 68 ஆம் பிரிவின் கீழ் அதிகாரியினால் ஆக்கப்பட்டு, நியமிக்கப்பட்ட திகதிக்கு நேர்முந்திய நாளன்று பயனுறுவதாக விருந்த ஒவ்வொரு விதியும் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட விதியாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அப்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் விதியினால் அதற்கிணங்கத் திருத்தப்படலாம் அல்லது நீக்கப்படலாம்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

30. இச் சட்டத்தின் சிங்கள உரைக்கும், தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.